
முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியபோது,,,



குத்துச்சண்டை மையம் மாதிரித் தோற்றம்...





# திராவிட மாடல் அரசு

## 74

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

# முத்தமிழறிஞர் கலைஞர்

## சர்வதேச குத்துச்சண்டை மையம்!

தேசிய அளவிலான குத்துச்சண்டைப் போட்டிகளில் தமிழ்நாட்டு வீரர்கள் பதக்கங் களை அள்ளி வருவது வாடிக்கையான நிகழ்வு.

கடந்த மாதம் மகாராஷ்டிர மாநிலம், புனேவில் நடைபெற்ற தேசிய அளவிலான குத்துச்சண்டைப் போட்டியில், 44 தங்கம், 17 வெள்ளி, 26 வெண்கலப் பதக்கங்களை வென்று ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினர் தமிழ்நாட்டு வீரர்கள்.

இம்மாதத் தொடக்கத்தில், ஜம்முவில் நடைபெற்ற 19 வயதுக்குட்பட்டோருக்கான போட்டியில், மயிலாடுதுறை மாவட்டம், பல்லவராயன்பேட்டை நரிக்குறவர் குடியிருப்பில் வசிக்கும் சேகர் - ஜெரினா தம்பதியினரின் மகன் வீரசிவாஜி என்ற மாணவர் கலந்து கொண்டு இறுதிப் போட்டியில், பஞ்சாப் வீரரை வீழ்த்தி வெற்றிபெற்று தங்கப்பதக்கம் வென்றார். அம்மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு மாணவிகளும் தங்கப்பதக்கம் வென்று திரும்பினர்.

இப்படி, தமிழ்நாட்டு, குத்துச்சண்டைப் பதக்கப் பட்டியல் நீளமானது. அதற்குக் காரணம் குத்துச்சண்டைக் கலையில் தமிழ்நாடு கொண்டிருக்கும் அழுத்தமான பிடிப்பு. அதிலும் குறிப்பாக, குத்துச்சண்டை என்கிற வீர விளையாட்டில் வடசென்னை வாழ் மக்கள் கொண்டிருக்கும் நம்பிக்கை. அது அமெரிக்க கறுப்பின மக்கள் குத்துச்சண்டைப் போட்டிகள் மீது கொண்டிருந்த ஈடுபாட்டுக்கு இணையானது. அமெரிக்க கறுப்பின மக்களின் குத்துச்சண்டை நாயகன், உலகக் குத்துச்சண்டை சாம்பியன் முகமது அலிக்கு மக்கள் அளித்த ஆதரவு போல, சென்னையில் கிட்டேரி முத்து, பாக்ஸர் ஆறுமுகம் போன்ற குத்துச் சண்டை வீரர்களுக்கும் மகத்தான மக்கள் ஆதரவு இருந்தது.

1990-ஆம் ஆண்டுக்கு முன்புவரை சென்னையில் குத்துச்சண்டை விளையாட்டு சென்னை வாழ் மக்களின் தினசரி வாழ்க்கை யுடன் கலந்திருந்தது. வடசென்னையில் பூர்வகுடி மக்களான மீனவர்கள், தாழ்த்தப்பட்ட வர்கள் மற்றும் ஆங்கிலோ இந்தியர்கள் என விளிம்பு நிலை மக்களின் விருப்ப விளையாட்டாக குத்துச்சண்டை இருந்தது. அதையொட்டி, போட்டிகளும், பரிசுகளும், குத்துச்சண்டையைப் பயிற்றுவிப்பதற்கான பரம்பரைகளும் இருந்துள்ளன என்பது வரலாறு.

குத்துச்சண்டை விளையாட்டிற்குப் புகழ்பெற்ற சென்னை மாவட்டத்தில், இளை ஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தை ஊக்கு விக்க, நவீன தொழில்நுட்ப வசதி மற்றும்



குத்துச்சண்டை மையம் கட்டுமானப் பணி...

### அமைய உள்ள வசதிகள்

- குளிரூட்டி வசதியுடன் பார்வையாளர் அரங்கம்.
- முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, உடை மாற்றும் அறை, அலுவலர் அறை, பயிற்றுநர் அறை மற்றும் கழிவறை வசதிகள்.
- பயிற்சிக்கான இடம் மற்றும் உடற்பயிற்சிக் கூடம்.
- சர்வதேசப் போட்டிகளுக்கு ஏற்ப நவீனக் கருவிகள், வாகன நிறுத்துமிட வசதிகள்.

### வாய்ப்புகள்

- சர்வதேச குத்துச்சண்டை மைதானம் மற்றும் மையம் அமைப்பதன் மூலம் சர்வதேசப் போட்டிகளை சென்னையில் நடத்த முடியும்.
- சென்னை குத்துச்சண்டை வீரர்கள் உலகளவில் கவனம் பெற முடியும். சென்னை குத்துச்சண்டை விளையாட்டு நகரமாக மேலும் வளரும்.

விளையாட்டுக் கருவிகள் கொண்ட சர்வதேச குத்துச்சண்டை மைதானம் மற்றும் பயிற்சி மையம் அமைத்து, மரபின் தொடர்ச்சியை நவீனமாக மாற்றித் தர உள்ளது, திராவிட மாடல் அரசு.

### கேள்வியும் பதிலும்

2022-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சட்டமன்றம் கூடியபோது, கேள்வி நேரத்தில் “அரசியல் குத்துச்சண்டைகளில் வெற்றி வாகைச் சூடிய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த கோபாலபுரத்தில், இளைஞர்களின் குத்துச்சண்டை ஆர்வத்தை ஊக்குவிக்க, ‘குத்துச்சண்டை அகாடமி’ அமைக்கப்பட வேண்டும்” என கோரிக்கை விடுத்தார் ஆயிரம் விளக்குத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் எழிலன். அப்போது, விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராக பொறுப்பு வகித்த சிவ.வி.மெய்யநாதன் அவர்கள், ‘குத்துச்சண்டை மையம் அமைப்பதற்கான பணிகள் அந்த ஆண்டே தொடங்கப்படும்” என அறிவித்தார்.

குத்துச்சண்டை அகாடமி அமைப்பதற்கான திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்ட நிலையில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அமைச்சராக உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதும் பணிகள் துரிதமாக நடக்கத் தொடங்கின.

அதற்காக சென்னை கோபாலபுரத்தில் உள்ள, மாநகராட்சி விளையாட்டு மைதானத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, 7.79 கோடி ரூபாயில் அமைக்க திட்டமிடப்பட்டது. திட்ட மதிப்பீட்டில், ரூ. 2 கோடி ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, மீதமுள்ள 5.79 கோடி விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் பங்களிப்பு என இறுதி செய்யப்பட்டது.

### அடிக்கல்-பணிகள் தொடக்கம்

விரிவான திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, பணிகளும் தொடங்கப்பட்டன. கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 2-ஆம் தேதி, குத்துச்சண்டை அகாட மியின் பணிகளுக்கு காணொலி வழியாக முதலமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

விளையாட்டு மைதானத்தின் ஒரு பகுதியில், 52 ஆயிரம் சதுர அடி பரப்பளவு ஒதுக்கப்பட்டு, அதில் 22 ஆயிரம் சதுர அடியில் குத்துச்சண்டை அரங்கம் கட்டப்படு கிறது. இந்த அரங்கமானது தரைத்தளம் கொண்ட கட்டடமாக அமையவுள்ளது.

1,000 பேர் அமரக்கூடிய வகையில், ஸ்டேடி யத்தில் இரண்டு குத்துச்சண்டை வளையங்கள், பல பஞ்ச் பைகள் கொண்ட தனி அறை, முன்னாள் குத்துச்சண்டை சாம்பியன்களின் புகைப்படங்கள், சென்னை குத்துச்சண்டை வரலாற்றினைச் சித்திரிக்கும் காட்சியகமும் அமைக்கப்பட உள்ளன. குறிப்பாக, ஆண்கள், பெண்கள், திருநர்களுக்குப் பயிற்சி அளிக்கும் வகையிலும் இந்த மையம் செயல்படும்.

தற்போது கட்டுமானப் பணிகள் நடைபெற்று வரும் நிலையில், அந்தப் பணிகளை நவம்பர்-2024க்குள் முடிக்க விறுவிறுப்பாக வேலைகள் நடக்கின்றன. கட்டுமானப் பணிகள் முடி வடைந்ததும், குத்துச்சண்டை வளையம் மற்றும் உபகரணங்கள் அடுத்த கட்டமாக நிறுவப்பட உள்ளன.

திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, தமிழ்நாட்டின் பல்வேறு விளையாட்டுகளுக்கு அரசு முக்கியத்துவம் அளித்து வருகிறது.

**தமிழ்நாட்டு வீரர்கள் ஒலிம்பிக் குத்துச்சண்டைப் பதங்கங்களை அள்ளிவரும் நாட்களுக்குக் காத்திருக்கும் கோபாலபுரத்தில் அமையவுள்ள, முத்தமிழறிஞர் கலைஞர் குத்துச்சண்டை மையம்.**

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி அவர்களின் ஆர்வமும் விளையாட்டுத் துறையை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு சென்று வருகிறது.

தேசிய அளவில், தங்கங்களைத் தட்டி வரும் தமிழ்நாட்டு குத்துச்சண்டை வீரர்களை, அமையவிருக்கும் **‘கோபாலபுரம் ஸ்டேடியம்’** மேலும் பட்டைத் தீட்டும். கல்வியில், வேலை வாய்ப்பில், தமிழ்நாட்டு இளைஞர்களின் கனவுகளைச் சாத்தியமாக்கும் முயற்சிகளில் விளக்கேற்றி வைத்தது **கோபாலபுரம் இல்லம்**. அதைப் போலவே தமிழ்நாட்டு வீரர்கள் ஒலிம்பிக் குத்துச்சண்டைப் பதங்கங்களை அள்ளிவரும் நாட்களுக்குக் காத்திருக்கும் அதே கோபாலபுரத்தில் அமையவுள்ள, முத்தமிழறிஞர் கலைஞர் குத்துச்சண்டை மையம்.

**...சாதனை தொடரும்**

### ‘சொற்களின் பின்னுள்ள அரசியல்!’

திருமண விருந்தில் சத்தமாக “சோறு கொண்டு வாங்க” என்று நாம் கூப்பிடுகிறோமா? கூப்பிடுவதில்லை.

காரணம், நம்மை அறியாமல் சோறு என்ற சொல்லை தாழ்ச்சிக்குரிய ஒன்றாக மாற்றி வைத்திருக்கிறார்கள்.

சோறு என்பது சங்க இலக்கிய காலத்தில் இருந்து நம்முடன் வருகிறது. ‘பெருஞ்சோற்று உதியன்’ என்ற அடைமொழியுடன் புறநானூற்றில் வேந்தர்கள் வந்து போகிறார்கள். ஆனால், திட்டமிட்டு சோறு கீழான ஒன்றாகவும், சாதம் உயர்வான ஒன்றாகவும் மாற்றப்படுகிறது.

இழிவு செய்யும் இடங்களில் மறக்காமல் சோறு எனக் குறிப்பிடப்படுகிறது. “சோத்துக்கு வழியில்லாதவர்” என பேசப்படுவதைப் பார்க்கிறோம். “சாதத்துக்கு வழியில்லாதவர்” என எழுதப்படுகிறதா? காரணம்?

அதன் பின்னால் உள்ள அரசியல்.

“கல்யாண சமையல் சாதம்” என்று புகழ்ந்து பாடல் வரும். “எச்ச சோறு”என்று இகழ்ந்து வசனம் வரும். இதில் இருந்தே இதன் பின்னுள்ள அரசியலைப் புரிந்து கொள்ளலாம்.

உச்சக்கட்டமாக வீடுகளில் பிள்ளைகளை திட்ட “தண்டச் சோறு” என்ற இடம் வரை வந்து நிற்கிறது. எங்காவது “தண்ட சாதம்” என்று சொல்வதுண்டா?

சாதம் என்ற சொல், பிரசாதம் என்ற சொல்லின் விகுதி. பிரசாதம் என்பது உயர்வான ஒன்றாகப் பார்க்கப்படுகிறது. கோயில்களில் பூசனைகளுக்குப் பிறகு வழங்கப்படும் தேங்காய் பழம் போன்றவற்றுக்குப் பிரசாதம் என்று பெயரிடப்பட்டுள்ளது. மதிப்பிற்குரிய ஒன்றாக பொது இடங்களில் பிரசாதம் பயன்படுத்தப்படுகிறது. அந்தச் சொல்லின் சரிபாதி சாதம் என்பது போல பெயர் சூட்டுவிழா கண்டுள்ளது.

இது வெறும் வடமொழிச் சொல் - தமிழ்ச் சொல் வேறுபாட்டை அறிவதற்கானதல்ல. தமிழ்ச் சொற்கள் தாழ்வான ஒன்றாக, நம் மனத்திலே பதிய வைத்து நம்மையே அச்சொல்லைச் சொல்ல முடியாமல் போகும் அளவுக்கு, மாற்றுவதற்குப் பின்னுள்ள அரசியல்.

தாய்மொழியில் பேசவும் முடியாத ஒருவன், எப்படித் தாய்மொழிக்காகச் சிந்திக்கச் செய்வான்?

**-கிருஷ்ணமூர்த்தி என்பவரின் X தள பதிவு.**

### ஃப்ளாஷ்பேக்



### அகவை - 90 கவியரங்கம்!



கவிஞர் சிவராஜ்

02.06.2013 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 90-வது பிறந்தநாளை, 90 கவிஞர்கள் கூடிக் கொண்டாட முடிவு செய்தோம். கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சென்னை, தாஜ் ஹோட்டலில் இந்த நிகழ்வைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். 90 கவிஞர்களும் கலைஞர் அவர்களைச் சந்தித்து, தாங்கள் எழுதிய புத்தகங்களை அவரிடம் அளித்து வாழ்த்துகளைப் பெற்றனர். அப்போது நான் எழுதிய ‘புதைத்த நிலம்’ ‘நில மிசை’ ஆகிய கவிதை நூல்களை, கலைஞர் அவர்களிடம் அளித்து, பிறந்தநாள் வாழ்த்தைத் தெரிவித்தேன். என் வாழ்நாளில் மறக்க முடியா நிகழ்விது.

**- கவிஞர் சிவராஜ்,**
**கோடம்பாக்கம், சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


#### சொந்த கட்டடமும் அச்சகமும்!

1952-ஆம் ஆண்டு பொதுத் தேர்தல் முடிவடைந்த பின்னர், ஏப்ரல் மாதம் ஈரோட்டில் கழகத்தின் பொதுக்குழு கூடியது. அந்தக் கூட்டத்தில் பேசிய பேரறிஞர் அண்ணா, முதல் மாநாட்டின் வரவு செலவு, ‘அறிவகம்’ கட்டடம் வாங்குவதற்கு மக்களிடம் வசூலித்த நிதி விவரங்களை விளக்கினார். மாநில மாநாட்டு மொத்த வரவு ரூ.74,067. கட்டட நிதிக்காக திரட்டிய தொகை ரூ.25,105. கழகச் செலவுக்காக நிதி வசூல் ரூ.2,500. மொத்தம் ரூ.1,01,672. மாநாட்டுச் செலவு போக, மீதத் தொகையைக் கொண்டு சொந்த அச்சகம் நிறுவ உள்ளதாகவும் அறிவித்தார் அண்ணா.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

518

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131